உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 29.04.2026 • மலர் 04 • இதழ்: 119 • Edition : Nagercoil • 29.04.2026 • Vol : 04 • Issue : 119 • Page : 4 • Rs. 5/-

### சிக்கிம் மாநிலத்தின் வளர்ச்சியை

# காங்கிரஸ் அரசு தடுத்தது

## பிரதமர் மோடி குற்றச்சாட்டு

சிக்கிம், ஏப். 29

சிக்கிம் மாநிலம் உருவாக்கப்பட்டதன் 50ம் ஆண்டு நிறைவு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். கேங்டாக் பல்ஜோர் மைதானத்தில் நடைபெற்ற பாரம்பரிய நடன நிகழ்ச்சிகளை கண்டு ரசித்த பிரதமர் மாடி, ரூ.4,000 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து, அடிக்கல் நாட்டினார்.

அதன்பின்னர் பிரதமர் மோடி பேசியதாவது:

கிழக்கின் சொர்க்கம் சிக்கிம்; இந்த மாநிலம் ஆர்க்கிட் மலர்களின் தோட்டம். ஆர்க்கிட் மலர்களை காணவில்லை எனில் உண்மையான அழகை நீங்கள் அனுபவிக்கவில்லை என அர்த்தம். ஒரு புதிய உணர்வு, மகிழ்ச்சி, எங்கும் நிறைந்திருந்த பண்டிகை சூழலைக் கண்டு நான் வியக்கிறேன்

சிக்கிமின் வண்ணங்கள் தனித்துவமானவை; இணையற்ற அழகு, அமைதி உள்ளிட்டவை பேரின்பம். மக்களிடையே பாகுபாட்டை உருவாக்க முயற்சி நடக்கும்போது ஒரே இந்தியா என்ற பார்வையை சிக்கிம் கொண்டுள்ளது. சிக்கிம் மக்களின் உண்மையான தேசபக்தி நாடு முழுவதும் உள்ள மக்களின் இதயங்களை வென்றுள்ளது.

அரசியல் சுயநலத்திற்காக, சாதி பாகுபாடு மற்றும் பிரிவினைவாதத்தை வளர்க்க தொடர்ச்சியான முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் வேளையில், இன்று சிக்கிம் மாநிலம் 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்ற தொலைநோக்குப் பார்வையை உலகுக்கு நிரூபித்துக் காட்டியுள்ளது. இதுதான் உண்மையான தேசப்பற்று. இத்தகைய முயற்சிகளின் மூலம்தான் புதிய தலைமுறையினரிடம் தேசபக்தி உணர்வுகள் விழித்தெழும்.

சிக்கிம் மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களை முந்தைய காங்கிரஸ் அரசு புறக்கணித்தது. மாநிலத்தில் வளர்ச்சியை காங்கிரஸ் தடுத்தது. இன்று பாஜக அரசு செய்து வரும் பணிகளை முன்னரே செய்திருக்க முடியும், ஆனால் காங்கிரஸ் அரசு அதை செய்யவில்லை. உதாரணமாக, சிவோக் ரங்போ ரெயில் பாதை திட்டம் 200809 ஆம் ஆண்டிலேயே அனுமதி அளிக்கப்பட்டது, ஆனால் அதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. மத்தியில் பாஜக ஆட்சிக்குவந்தபிறகுதான் சிக்கிமில் வளர்ச்சிப் பணிகள் வேகம் எடுத்தன.



இப்போது முதல்முறையாக, சிக்கிம் மாநிலத்திற்கு ரெயில் பாதை அமைய உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## கொடைக்கானலில் முதல்வர் ஸ்டாலின் சைக்கிள் பயணம்




பழநி, ஏப். 29

கொடைக்கானலில் 3வது நாளாக நடைப்பயிற்சியில் ஈடுபட்ட முதல்வர் ஸ்டாலின், ஆரோக்கியமாகஇருக்க, வாக்கிங்போங்க... என்று பொதுமக்களுக்கு 'அட்வைஸ்' செய்தார். தொடர்ந்து ஏரியைச் சுற்றி முதல்வர் சைக்கிளில் வலம் வந்தார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு நடந்து முடிந்துள்ள நிலையில் கொடைக்கானலில் 5 நாட்கள் தங்கி ஓய்வெடுப்பதற்காக குடும்பத்துடன் முதல்வர் ஸ்டாலின் வந்துள்ளார். கடந்த 2 நாட்களாக நட்சத்திரஏரி, மனோரஞ்சிதம் அணைப் பகுதியில் முதல்வர் நடைப்பயிற்சியில் ஈடுபட்டார்.

3வது நாளான இன்று (ஏப்.28) காலை நட்சத்திர ஏரி பகுதியில் நடைப்பயிற்சியில் ஈடுபட்டார் முதல்வர். அப்போது, ஆரோக்கியத்துடன் இருக்க தினமும் 'வாக்கிங் போங்க...' என்று பொதுமக்களுக்கு 'அட்வைஸ்' செய்தார். அப்போது, பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் அவருடன் செல்போனில் புகைப்படம் எடுத்து கொண்டனர்.

இடையில்ஒருஹோட்டலில் அமர்ந்து, டீ அருந்தியவாறு சிறிது நேரம் ஓய்வெடுத்தார். பின்னர், நட்சத்திர ஏரியைச் சுற்றி சைக்கிள் பயணம் மேற்கொண்டார். முதல்வர் ஸ்டாலின் சைக்கிள் பயணம் மேற்கொள்வதை அறிந்த ஏராளமான பொதுமக்கள் சாலையோரம் நின்று, அவருக்கு கையசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அவரும் பொதுமக்களைப் பார்த்து கையசைத்தவாறே சைக்கிள் பயணம் மேற்கொண்டார்.

பின்னர், காரில் ஏறி தங்கும் விடுதிக்கு முதல்வர் திரும்பினார். இன்றைய தினம் கொடைக்கானல் மேல் மலை கிராமமான மன்னவனூரில் உள்ள மத்திய அரசின் செம்மறி ஆடு ரோம உற்பத்தி ஆராய்ச்சி மையத்தில் உள்ள ஆடு மற்றும் முயல் பண்ணை, வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சூழல் சுற்றுலா மையத்தை முதல்வர் பார்வையிட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

### திருச்செந்தூர் கோயிலில்

## தவெக தலைவர் விஜய் சாமி தரிசனம்



திருச்செந்தூர், ஏப். 29

தவெக தலைவர் விஜய் இன்று காலை திருச்செந்தூர் முருகன் கோயிலில் சாமி தரிசனம் செய்தார். அப்போது அவருக்கு பூரண கும்ப மரியாதை வழங்கப்பட்டது.

தமிழகத்தில் கடந்த 23ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்றது. இதில் 85 சதவீத வாக்குகள் பதிவாகின. இந்த தேர்தலில் தவெக சார்பில் 233 தொகுதிகளில் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் மட்டும் சுயேச்சை வேட்பாளருக்கு ஆதரவு வழங்கியது தவெக. தேர்தலை முன்னிட்டு மாநிலத்தின் பல்வேறு நகங்களில் விஜய் பரப்புரை மேற்கொண்டார்.

வரும் மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. இந்நிலையில், விஜய் திருச்செந்தூர் முருகன் கோயிலில் சாமி தரிசனம் செய்துள்ளார்.

இதற்காக சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் மதுரை நகருக்கு அவர் வந்தார். தொடர்ந்து அங்கிருந்து காரில் திருச்செந்தூர் சென்றார். அங்கு கடற்கரையில் கால்களை அவர் நனைத்தார்.

பின்னர் கோயிலிக்குள் சென்று மூலவரான சுப்பிரமணியசுவாமியை தரிசனம் செய்தார். தொடர்ந்து அவருக்கு பூரண கும்ப மரியாதை செய்யப்பட்டது. அவருடன் தவெக பொதுச் செயலாளர் ஆனந்த், கட்சி தொண்டர்களும் பங்கேற்றனர். அப்போது அவருக்கு வெற்றிவேல் நினைவு பரிசாக வழங்கப்பட்டது. தரிசனத்தை முடித்துக் கொண்ட பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டார்.

முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் கடற்கரையோரம் அமைந்துள்ள ஸ்தலம் ஆகும். இந்தக் கோயிலுக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து, முருகனை வழிபடுவது வழக்கம்.

### மணப்பாறை அருகே

## பைக் மோதி விபத்து மூதாட்டி பலி



திருச்சி, ஏப். 29

மணப்பாறை அருகே கல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 70 வயது மூதாட்டி முத்துலட்சுமி, நேற்று தனது விவசாய நிலத்திற்குச்செல்ல சாலையைக் கடக்க முயன்றபோது, இருசக்கர வாகன மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இது குறித்து வழக்கு பதிவு செய்த மணப்பாறை போலீசார், விபத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சுக்காம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மணிகண்டனிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது தமிழ்நாடு: தங்கம் தென்னரசு

சென்னை, ஏப். 29

மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள சமீபத்திய தரவுகளின்படி, 202526வது ஆண்டில் 10.83 சதவீதம் என்ற பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது. முந்தைய ஆண்டில் தமிழகத்தின் வளர்ச்சி விகிதம் 11.19 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.



இந்த நிலையில் இரண்டாவது ஆண்டாக இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்து இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது தமிழ்நாடு என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தொடர்ந்து 2வது நிதி ஆண்டாக இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்து இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது நம் தமிழ்நாடு! எந்தத் தடையையும் தகர்த்து, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக நிலைநிறுத்திவரும் நம் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் என்ற தொலைநோக்குப் பார்வைக் கொண்ட தலைவனின் கனவுகளும் உழைப்புமே இதற்கு மூல முதற்காரணம்.

தொழில் வளர்ச்சி, உட்கட்டமைப்பு மற்றும் சரியான திட்டமிடல் என அனைத்துத் துறைகளிலும் முதல்வர் காட்டி வரும் அக்கறையே, இன்று நம் மாநிலத்தை இந்தச் சிகரத்தில் ஏற்றி வைத்துள்ளது. வளர்ச்சி நாயகன் தலைமையில் திராவிட மாடல் 2.0வில் தமிழ்நாடு இன்னும் பல சாதனைகளைப் புரியும்!

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## வங்கியில் பணம் எடுக்க சகோதரியின் எலும்புக்கூட்டை சுமந்து வந்த அண்ணன்: மாணிக்கம் தாகூர் எம்.பி. வேதனை

சென்னை, ஏப். 29

இறந்துபோன தனது தங்கையின் வங்கிக் கணக்கில் இருந்து பணம் எடுப்பதற்காக, தங்கையின் எலும்புக்கூட்டை அண்ணன் சுமந்துகொண்டு வங்கிக்கு வந்த சம்பவம் ஒடிசாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து மாணிக்கம் தாகூர் எம்.பி. தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;



ஒடிசாவிலிருந்து வரும் இந்தக் செய்தி அதிர்ச்சியூட்டுவது மட்டுமல்ல.. நிதி மந்திரி நிர்மலா சீதாராமனின் ஆட்சியில் நமது வங்கி அமைப்பு எவ்வளவு ஆழமாகச் சிதைந்துவிட்டது என்பதையும் இது அம்பலப்படுத்துகிறது.

தன் சகோதரியின் மரணத்தை நிரூபித்து, அவருக்குச் சேர வேண்டிய பணத்தைப் பெறுவதற்காக, ஒருவர் தனது சகோதரியின் எலும்புக்கூட்டை வங்கிக்கு கொண்டுவரும் அளவுக்கு நிர்பந்திக்கப்படுகிறான். எந்த வகையான அமைப்பு இந்த அளவிலான கொடூரத்தைக் கோருகிறது? இது மனிதாபிமானமற்ற செயல்.

கடந்த பல ஆண்டுகளாக, வங்கிகள் பணக்காரர்களுக்கான சுலபமான பாதைகளாக மாறிவிட்டன. பெரும் கடன்களைத் தள்ளுபடி செய்வது. விதிகளை வளைப்பது, மற்றும் அதிக கடன் வைத்திருப்போரை கண்டுகொள்ளாமல் இருப்பது போன்றவை. ஆனால் சாதாரண குடிமக்களுக்கு? முடிவில்லாத ஆவணப் பணிகள், சந்தேகம், அவமானம், இப்போது இந்த பயங்கரமான சோதனையும் கூட.

நிதி மந்திரி இந்த சம்பவத்துக்கு நடவடிக்கை எடுப்பாரா? இதற்குப் பொறுப்பான பொது மேலாளரை அவர் இடைநீக்கம் செய்வாரா? இந்த மனிதாபிமானமற்ற செயலுக்கு வங்கி மேலாளர் பொறுப்பேற்க வைக்கப்படுவாரா? அல்லது வழக்கம் போல் மௌனம் நிலவுமா? பொறுப்பேற்பு என்பது பாரபட்சமாக இருக்க முடியாது. செல்வந்தர்களுக்காக மலைகளைக்கூட நகர்த்தக்கூடிய இந்த அமைப்பு, ஏழைகளை குறைந்தபட்சம் கண்ணியத்துடன் நடத்த வேண்டும். இது வெறும் வங்கியின் தோல்வி மட்டுமல்ல. இது நிர்வாகத்தின் தோல்வி."

இவ்வாறு அவர் அதில் பதிவிட்டுள்ளார்.

## தேனி மாவட்டத்தில்

# மங்கலதேவி கண்ணகி கோயில் திருவிழா முன்னேற்பாடு ஆலோசனை கூட்டம்



தேனி, ஏப். 29

தேனி மாவட்டத்தில் மங்கலதேவி கண்ணகி கோயில் திருவிழா முன்னேற்பாடு ஆலோசனை கூட்டம் நடைபெற்றது தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், தமிழக கேரள எல்லையில் அமைந்துள்ள மங்கல தேவி கண்ணகி கோயிலில் நடைபெறவுள்ள சித்திரை முழுநிலவு திருவிழாவை முன்னிட்டு, முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் (27.04.2026) நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங் தலைமையேற்று, திருவிழா காலத்தில் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், போக்குவரத்து வசதிகள், மருத்துவ உதவி மற்றும் குடிநீர் உள்ளிட்ட வசதிகளை சிறப்பாக ஏற்பாடு செய்வது குறித்து அதிகாரிகளுடன் விரிவாக ஆலோசனை நடத்தினார். மேலும், தமிழககேரள எல்லைப் பகுதியாக இருப்பதால், இரு மாநிலங்களின் இணைந்து செயல்பாடுகளும் முக்கியம் எனக் குறிப்பிடப்பட்டு, அதற்கான ஒருங்கிணைப்பை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

## விளாத்திகுளம் பேரூராட்சியில்

# சொத்து வரி உடனடியாக 30.04.2026 ம் தேதிக்குள் கட்டுபவர்களுக்கு 5 சதவீதம் கட்டண சலுகை

விளாத்திகுளம் ஏப்ரல் 29

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பேரூராட்சி செயல் அலுவலர் சுப்பிரமணியன் வெளியிட்டுள்ள 20262027 ஆம் ஆண்டின் சொத்து வரியை வரும் ஏப்.30 ஆம் தேதிக்குள் செலுத்தி கட்டணத்தில் 5 சதவீதம் (அதிகபட்சம் ரூ.5000/) சலுகை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதன் பின்பு அக்டோபர் மாதத்திற்கு முன்பு செலுத்துபவர்களுக்கு 2.5 சதவீதம் சலுகைகள் வழங்கப்படும். சொத்து வரி பணம் செலுத்துபவர்கள் இணையதளம் வழியாகவோ அல்லது பேரூராட்சி வரி வசூல் மையத்திலும் நேரடியாக சென்று செலுத்தலாம். இந்த சலுகையை விளாத்திகுளம் பேரூராட்சி பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



## பாலக்கோடு அருகே

# அரசு நகர பேருந்து மீது புளிமரம் சாய்ந்து விபத்து அதிர்ஷ்டவசமாக பயணிகள் உயிர்த்தப்பினர்

தருமபுரி ஏப்ரல் 29

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே கெண்டேனஹள்ளி நெடுஞ்சாலையில் அரசு நகரப் பேருந்து மீது புளிய மரம் விழுந்தது அதிர்ஷ்டவசமாக பயணிகள் உயிர்த்தபினர். பாலக்கோட்டிலிருந்து 22 ம் எண் கொண்ட அரசு நகர பேருந்து மாரண்டஹள்ளி, சந்திராபுரம், கெண்டேனஹள்ளி, சாஸ்திரமுட்லு, அத்திமுட்லு உள்ளிட்ட பகுதிகளுக்கு இயக்கப்பட்டு வருகின்றது. நேற்று காலை கெண்டேனஹள்ளி நெடுஞ்சாலையில் சென்று கொண்டு இருந்த போது சாலையோரத்தில் இருந்த புளியமரம் நகர பேருந்து மீது திடீரென சாய்ந்ததால் பேருந்தில் இருந்த பயணிகள் அலறடித்துக் கொண்டு பேருந்து விட்டு கீழே இறங்கினர். அதிர்ஷ்டவசமாக உயிர் சேதம் இன்றி 20 க்கும் மேற்பட்ட பயணிகள் உயிர்த்தப்பினர். இச்சம்பவத்தால் அப்பகுதியில் திடிர் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் குறித்து அவதூறு பரப்புவோர் மீது நடவடிக்கை

## மாவட்ட மாநகர காவல் ஆணையாளரிடம் புகார் மனு



திருப்பூர் ஏப்.29

மனிதநேய ஜனநாயக கட்சி திருப்பூர் மாவட்ட செயலாளர் ராயல் ராஜா தலைமையில் திருப்பூர் மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்.

அந்த மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது..

மனிதநேய ஜனநாயக கட்சியின் மாநில தலைவரும் முன்னாள் எம்எல்ஏ தமிமுன் அன்சாரி குறித்து ஒரு கட்சியின்தலைவர் மற்றும் அக்கட்சியை சேர்ந்தவர்கள் சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பி வருகிறார்கள் இதனால் பொது அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்படுகிறார்கள் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.



தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலில் நடைபெற உள்ள சித்திரைப் பெருந்திருவிழாவை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையேற்று, திருவிழா ஏற்பாடுகள், பாதுகாப்புநடவடிக்கைகள், போக்குவரத்துவசதிகள்மற்றும்பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். திருவிழா சிறப்பாகவும், பாதுகாப்பாகவும் நடைபெற தேவையான அனைத்து முன்னெச்சரிக்கைநடவடிக்கைகளையும்மேற்கொள்ளஅதிகாரிகளுக்குஅறிவுறுத்தினார்.

# தோஷிபா ஜான்சன் எலிவேட்டர்ஸ் பெரும்பான்மை பங்குகளை பெற்ற ஜான்சன் லிப்ட்ஸ் நிறுவனம்




சென்னை, ஏப்ரல் 29

இந்தியாவில்மின்தூக்கி மற்றும் நகரும் படிக்கட்டுகள் உற்பத்தி செய்வதில் முன்னணியிலும் ரூ.4000 கோடி மதிப்பிலான விற்றுமுதல் கொண்ட, ஜான்சல் லிஃப்ட்ஸ் நிறுவனம் ஆகும் . அது தோஷியா ஜான்சன் எலிவேட்டர்ஸ (இந்தியா) நிறுவனத்தில் தனது பங்கு முதலீட்டை அதிகப்படுத்தியன் மூலம் பெரும்பான்மை பங்குதாரராக மாறியிருப்பதாக இன்று தெரிவித்துள்ளது. குறிப்பாக இந்திய சந்தைக்காக இவ்விரு நிறுவனங்களும் உலகத் தரம் வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதில் சிறந்துவிளங்கிறது.

ஜான்சன் லிப்ட்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் யோஹன் கே. ஜான் பேசும்போது:

ஜான்சன் நிறுவனம் பெரும்பான்மை பங்குதாரராக மாறியிருப்பதால் தோஷிபா ஜான்சன் எலிவேட்டர்ஸ் நிறுவனமானது புதிய வளர்ச்சியை நோக்கி நகர்த்துள்ளது. தோஷிபாவின் தொழில்நுட்பத் திறனும் பொருட்களின் தரமும் இந்திய சந்தையை பற்றிய எங்களது புரிதலும் விற்பனை, சேவை வசதிகளும் பெரும்பான்மை வாடிக்கையாளர்களை பெற்றுள்ளன. இந்தியாவில் மின் தூக்கிகள் மற்றும் நகரும் படிக்கட்டுகளின்தேவைமிகவேகமாக அதிகரித்து வரும் நிலையில், தோஷிபா தனது சந்தையை மேன்மேலும் விரிவாக்கி கொள்ள முடியும்"

ஜான்சன் மற்றும் தோஷிபா ஆகிய இரு நிறுவனங்களும் இணைந்துள்ள நிலையில், மின் தூக்கிகளின் சந்தை மதிப்பில் இந்நிறுவனங்களின் பங்கு 20%, நகரும் படிக்கட்டுக்கான சந்தை மதிப்பில் இவற்றின் பங்கு 30% உயர்ந்துள்ளன.

இதனால், பிரீமியம் மற்றும் அதிவேக நகர்திறன் தீர்வுகளை (mobility segment) வழங்குவதில் இந்தக் குழுமத்தின் சந்தை வலிமை மேலும் உறுதியாகியுள்ளது என்றார். மேலும் இதன் நிர்வாக இயக்குநர்வில்ஃப்ரெட் க்ளாரன்ஸ் மார்டின் 'தோஷிபா ஜான்சன் நிறுவனமானது இந்திய சந்தையில் விற்பனை மற்றும் சேவைத் திறனை வலிமைப்படுத்தி கொண்டு வாடிக்கையாளர்களின் தொடர்பையும் அதிகரித்துக்கொள்ள விரும்புகிறது.

இதன் மூலம், இந்தியாவில் விற்பனையாகும் ஜப்பானிய மின் தூக்கிகளின் சந்தையில் தோஷிபாஜான்சன் முதன்மைப்படுத்திக்கொள்ள இலக்குநிர்ணயித்துள்ளது என்றார்.

## பென்னாகரம் அருகே

# மதுபாட்டில்கள் பதுக்கி விற்ற 4 கடைகளை அடித்து நொறுக்கிய பெண்கள்



தருமபுரி ஏப்ரல் 29

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ஏராளமான மதுக்கடைகள் (சந்துகடைகள்)சாதாரணமாகசெயல்பட்டுவருகின்றன. இதனை தடுக்க வேண்டும் என வலியுறுத்தி அந்த பகுதி பொதுமக்கள் காவல்துறையினரிடம் பலமுறை புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இந்த நிலையில் போடூர் கிராமத்தில் 4 சந்து கடைகள் செயல்பட்டு வந்துள்ளன. இதனால் அதிகாலை நேரம் முதலே மதுபிரியர்கள் சந்துக்கடைகளில் மது வாங்கி குடித்து வந்துள்ளனர். மேலும் மதுப்பிரியர்கள் அவ்வழியாக செல்லும் பெண்களை கேலி, கிண்டல் செய்துள்ளனர். இதனால் பள்ளி,கல்லூரிமாணவிகள்,பெண்கள்எனஅனைவரும் பாதிக்கப்பட்டனர். இதற்கு போலீசாரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் ஆத்திரமடைந்த பெண்கள்,இளைஞர்கள்எனபொதுமக்கள்அனைவரும் ஒன்று திரண்டு போடூர் பகுதியில் செயல்பட்டு வந்த 4 சந்து கடைகளையும் அடித்து நொறுக்கினார். அப்போது பொதுமக்களிடம் எதிர்ப்பு தெரிவித்து சண்டையிட்ட சந்துக்கடை உரிமையாளர் கோவிந்தனை பெண்கள் ஓட ஓட விரட்டி தாக்கினார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது . இந்த நிலையில் பென்னாகரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் பாபு, சுரேஷ்குமார் மதுபானங்களை பதுங்கி விட்டதாக போரூர் பகுதியை சேர்ந்த கோவிந்தராஜ் (48), மாதேஷ் (58), சவுதாம்மாள் (39) ஆகிய மூன்று பேரையும் கைது செய்தனர்.

# தஞ்சாவூர் பெரிய கோயில் தேரோட்டம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு



தஞ்சாவூர் ஏப்ரல் 29

தஞ்சாவூர் பெரிய கோவில் சித்தி ரை பெருவிழா தேரோட்டம் நடைபெற்றது இதில் பல்லாயிரக்கணக் கான பக்தர்கள் பங்கேற்று சுவாமி யை தரிசனம் செய்தனர்

தஞ்சாவூர் பெரிய கோயிலில் சித்திரை பெருவிழா ஏப்ரல் 13ஆம் தேதி குடியிருந்த தொடர் தொடங்கியது .விழாவின் 15 வது நாள் ஆன திங்கட்கிழமை காலை 5:00 மணி அளவில் தேரோட்டத்தையொட்டி கோவிலில் ஸ்ரீ தியாகராஜர், ஸ்கந்தர் ,ஸ்ரீ கமலாம்பாள், புறப்படும் முத்துமணி அலங்கார சப்பரத்தில் பஞ்ச மூர்த்திகள் பரப்பப்பாடும் நடைபெற்றது திருத்தேரில் ஸ்ரீ தியாகராஜ கமலாம்பாள் எழுந்தருளிய பின்னர் 6.20 மணி அளவில் பக்தர்கள்வடம் பிடித்து இழுக்க தொடங்கினர் விநாயகர் ,சுப்ரமணியர், சப்பரங்கள் முன்னே புறப்பட்டு செல்ல, தொடர்ந்து தியாகராஜர்கமலாம்பாள் எழுந்தருளிய திருத்தேர் சென்றது .இதன் பின்னர் நீலோத்பலாம்பாள், சண்டிகேசுவரர் சப்பரங்கள் சென்றன. மேலவீதி, வடக்கு வீதி , கீழ வீதி ,தெற்கு வீதி வழியாக சென்று பக்தர்களுக்கு 14 இடங்களில் நின்று சென்றது. பின்னர் நண்பர்கள் 12 10 மணி அளவில் தேர் நிலையை அடைந் தது

விழாவில் மாவட்ட கலெக்டர்பிரியங்காபங்கஜம், மாவட்ட காவல்கண்காணிப்பாளர் ஏ. சுந்தர வதனம், முதன்மை மாவட்ட நீதிபதி பி.வேல் முருகன், கோட்டாட்சியர் நித்யா, தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவ லர் சி. பாலாஜி ராஜா போன் சிலே சதய விழா குழு தலைவர் து. செல்வம், தருமபுரஆதினகட்டளை விசாரணை சொக்கலிங்க தம்பிரான்,தஞ்சாவூர் ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி விமூர்த்தானந் மஹராஜ் மற்றும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்

விழாவில் தெற்கு வீதி வீரராகவ பள்ளி எதிரில் தமிழ்நாடு சிறுபான் மை மக்கள் நலக்குழு சார்பில் பக்தர்களுக்கு எலுமிச்சை சாறு, குடிநீர், நீர்மோர், ஆகிலவற்றை உலமாக்கள், இஸ்லாமியர்கள் உள்ளிட்டோர் வழங்கினர். தெற்கு வீதியில் தஞ்சாவூர் ரஜரயே முஸ் தபா அறக்கட்டளை சார்பில் முகமது ருஸ்தம் அலி ரஜ்விதலைமையில் பக்தர்கள் சுமார் 5000 குடிநீர் பால்கள் 2000 டம்ளர்களில் நீர்மோர் வழங்கப்பட்டது

இதேபோல நான்கு வீதிகளிலும் பல்வேறு அமைப்புகள் சார்பில் நீர் மோரும் , அன்னதானமும் வழங்கப்பட்டன.

## விளாத்திகுளம் அருகே

# ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு பால்குடம் எடுத்து நேர்த்தி செலுத்திய ஏராளமான பக்தர்கள்



விளாத்திகுளம் ஏப் 29

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள மேட்டுப்பட்டி கிராமத்தில்அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன், ஸ்ரீ மாரியம்மன்,ஸ்ரீ வடக்குத்தி அம்மன், ஸ்ரீ முனியசாமி ஸ்ரீ கருப்பசாமி திருக்கோவில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு, சிறியவர்கள் முதல்பெரியவர்கள்வரை அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்த காப்பு கட்டி விரதம் இருந்த பக்தர்களின் பால்குடங்களுக்கு, வைப்பாற்றில் சிவாச்சாரியார்கள் பூஜை செய்த பின் நையாண்டி மேளத்துடன் வைப்பாற்றில் இருந்து பக்தி பரவசத்துடன் கிளம்பிய பக்தர்களின் பால்குட ஊர்வலம் கிராமத்தில் உள்ள இதர தெய்வங்கள் கோவிலுக்கு சென்று ஊர்வலமாக வந்தவுடன், ஊர்வலமாக கொண்டு வந்த பால்குடங்களை வைத்து அம்மனுக்கு பல அபிஷேகம் நடைபெற்றது, அதனைத் தொடர்ந்து இளநீர், பன்னீர், சந்தன, மஞ்சள் உள்ளிட்ட பல்வேறு திரவியப்பொருட்களால் சிறப்பாக அபிஷேகம் மற்றும் அம்மனுக்கு சிறப்பு தீபாரணை நடைபெற்றது. இதில் கிராம மக்கள் மட்டுமல்லாது இக்கிராமத்தைச்சேர்ந்த தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்த மக்கள் திருவிழாக்கு வந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

இந்நிகழ்வில் ஊர் தர்மகத்தா T.விஜயகுமார். ஊர் கணக்கு பிள்ளை செல்வம் மற்றும் கிராம பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## திருச்சி

# சிறுவனிடம் ஓரினச்சேர்க்கை வாலிபருக்கு 20 ஆண்டு சிறை

திருச்சி, ஏப். 29

திருச்சி ராமலிங்கநகரில் கடைக்குச்சென்ற சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக புத்தூர் பகுதியைச் சேர்ந்த வெங்கடேஷ் என்பவர் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு விசாரணை முடிந்து நேற்று நீதிபதி சண்முகப்பிரியா, குற்றவாளி வெங்கடேஷுக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### தக்கலையில்

## சிங்கப்பூரில் வேலை வாங்கி தருவதாக ரூ.2.88 லட்சம் மோசடி; 3பேர் மீது வழக்கு

நாகர்கோவில், ஏப். 29

தக்கலை அருகே உள்ள திருவிதாங்கோடு பகுதியை சேர்ந்தவர் ஜஸ்டின் ஜோஸ் மகன் லிவிஸ் என்பவர் படித்து முடித்துவிட்டு வேலைக்காக முயற்சி செய்து கொண்டிருந்தார். அப்போது உறவினர் மூலம் திருநெல்வேலி மாவட்டம் பணகுடியை சேர்ந்த ராஜன் (64) என்பவர் பழக்கமானார். அவர் சிங்கப்பூரில் வேலை வாங்கி தருவதாக கூறி, அவருடன் சேர்ந்து கிருஷ்ணாபுரத்தை சேர்ந்த பாலுமணி (48), வில்லுகுறியை சேர்ந்த தனசாமி (51) ஆகியோரும் சேர்ந்து சிங்கப்பூரில் வேலை வாங்கி தருவதாக கூறி, ஜஸ்டின் ஜோஸ் மனைவி ஷோபா மேரி (46) என்பவரிடம் இருந்து 2,88,100 ரூபாய் பணமாக பெற்றுள்ளனர். கடந்த சில மாதங்களுக்கு முன் விசா ரெடியாக இருப்பதாக கூறி நாகர்கோவில் செல்ல அழைத்துள்ளனர். இதை நம்பிய ஷோபா மேரி தனது குடும்பத்துடன் நாகர்கோவில் சென்றுள்ளார். அங்கு காத்திருந்த பின்னர் ராஜன் உள்ளிட்டவர்கள் வரவில்லை. பின்னர் போனில் தொடர் கொண்டபோது, நாங்கள் அழைக்கும் போது மீண்டும் வாருங்கள் என கூறி விட்டு போனை துண்டித்துள்ளனர்.

அதன் பின்னர் அவர்களது செல்போன் சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதையடுத்து ஷோபா மேரி குமரி மாவட்ட போலீஸ் எஸ்.பி யிடம் புகார் அளித்தார். புகாரின் பேரில் தக்கலை போலீசார் விசாரணை நடத்தி நடத்த எஸ்பி உத்தரவிட்டார்.

இதை அடுத்து ஷோபா மேரி புகாரின் பேரில் ராஜன், பாலுமணி, தனசாமி ஆகிய 3 பேர் மீது மோசடி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்தனர்.

### கடும் வறட்சி காரணமாக

## வன விலங்குகள் தண்ணீர் குடிக்க கசிவு நீர் குட்டைகள்: வனத்துறையினர் நடவடிக்கை




ஈரோடு ஏப் 29

ஈரோடு மாவட்டத்தில் தற்போது கோடை காலம் தொடங்கி வனத்தில் வன உயிரினங்களுக்கான போதிய நீரின்றி வறட்சி நிலவி வருகிறது . இதை கருத்தில் கொண்டு ஈரோடு மாவட்ட வனத்துறையின் மூலமாக வனத்திற்குள் வனஉயிரினங்களின் நீர் தேவையினை போக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்திலுள்ள வனப்பகுதிகளில் வன உயிரினங்களின் வறட்சி காலங்களில் நீர் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில், கசிவு நீர் குட்டைகள் மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான தடுப்பணைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், முக்கிய வனப்பகுதிகளில் குடிநீர் தொட்டிகள் நிறுவப்பட்டு, அவற்றில் சூரிய ஒளியில் இயங்கும் மின்மோட்டார் வசதி மூலம் நீர் நிரப்பப்படுவதுடன், கடுமையான வறட்சி நிலவுகின்ற பகுதிகளில் வாகனங்கள் மூலம் நீர் கொண்டு சென்று நிரப்பும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. இதனுடன், இயற்கை நீர்நிலைகள் ஆழப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. வன உயிரினங்களின் உணவுத் தேவையை மேம்படுத்தும் வகையில் அந்நிய களைச்செடிகள் அகற்றும் பணிகளும் தீவிரமாக செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இதன் காரணமாக வன உயிரினங்கள் உணவு மற்றும் குடிநீர் தேவைக்காக வனத்தை விட்டு வெளியேறும் சூழல்கள் பெருமளவு குறைக்கப்படுகிறது. மேலும் சரகம் வாரியாக சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு ரோந்து பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதிநவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி இரவில் வன உயிரினங்களின் நடமாட்டங்கள் கண்காணிக்கப்பட்டு அவை வனத்தை விட்டு வெளியேறாமல் இருக்கு உரிய பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்லுயிர் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், மனிதர்களும் வனஉயிரினங்களுக்கும் இடையிலான முரண்களை குறைக்கவும் இந்த முயற்சிகள் உள்ளன என ஈரோடு வன அலுவலர் திரு.கு.வெ.அப்பால நாயுடு இ.வ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

### திருச்சி

## இரவில் வீட்டுக்குள் புகுந்த பாம்பு அதிர்ச்சி



திருச்சி, ஏப். 29

திருச்சி ஏர்போர்ட் பாரதிநகர் பகுதியில் நள்ளிரவில் ஒரு வீட்டில் நல்ல பாம்பு புகுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. குடும்பத்தினர் பாம்பை வெளியேற்ற முயன்றும் முடியவில்லை. தகவல் அறிந்த தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, மூன்று அடி நீளமுள்ள பாம்பை லாவகமாகப் பிடித்து வனப்பகுதியில் விட்டனர்.

இந்த சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் நடந்து முடிந்த சட்டமன்ற பொதுத்தேர்தல் வாக்கு எண்ணும் நாளான 4 ந் தேதி அன்று வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் குறித்து தேர்தல் நடத்தும் அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

### தக்கலை அருகே

## பெண்ணிடம் பல லட்சம் மோசடி பைனான்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 4 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், ஏப். 29

தக்கலை அருகே உள்ள குமாரபுரம் பகுதியை சேர்ந்தவர் சில்வன்ஸ் மனைவி சுடர்லின் (49). இவர் தனது குடும்ப தேவைக்காக மேக்கா மண்டபத்தில் உள்ள தனியார் பைனான்ஸ் நிறுவனத்தில் தங்க நகைகளை அடகு வைத்து பணம் பெற்றுள்ளார். அங்கு அதிக வட்டி ஆனதால் நகைகளை மீட்டு ஸ்டேட் வங்கியில் வைக்க முயற்சித்து வந்து இருக்கிறார்.

அப்போது வீட்டு அருகில் காய்கறி கடை நடத்தி வரும் கலா பாய் என்பவர் அழகிய மண்டபத்தில் தனக்கு தெரிந்த தனியார் பைனான்ஸ் உள்ளதாகவும், அங்கு நகை கடனுக்கு குறைந்த வட்டி வசூலிப்பதாக கூறியுள்ளார். இதை தொடர்ந்து சம்பந்தப்பட்ட பைனான்ஸ் நிறுவனத்திற்கு சுடர்லின் சென்றுள்ளார். அவர்களும் அரசுடமையாக்கப்பட்ட வங்கியில் என்ன வட்டி உள்ளதோ அதைத்தான் நாங்களும் வாங்குகிறோம் கூடுதல் வட்டி கிடையாது என கூறியுள்ளனர். எந்த வித தாமதம் இல்லாமல் உடனடியாக பணத்தை பெறலாம் எனகூறி இருக்கிறார்கள்.

இதை நம்பி சுடர்லின் 230 கிராம் தங்க நகைகளை ரூபாய் 12.50 இலட்சத்துக்கு அடகு வைத்துள்ளார். சில மாதங்களுக்கு பின் சம்பந்தப்பட்ட பைனான்ஸ் நிறுவனத்திற்கு சென்ற நகைகளை மீட்பது குறித்து கேட்டபோது, ரூ. 25 லட்சம் கட்ட வேண்டும் என கூறியுள்ளனர்.

அதன் பின்னர் தன்னை ஏமாற்றி மோசடியாக நகைகளை வாங்கியது தெரிய வந்தது. இது குறித்து சுடர் லின் கேட்ட போது அவர்கள் ஆபாசமாக பேசி மிரட்டி தாக்கியதாகவும்கூறப்படுகிறது. இது தொடர்பாக அவர் திருவட்டாறு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் அழகிய பாண்டிபரத்தை சேர்ந்த மன்சூர் அலி, பேச்சுப்பாரை சேர்ந்த பிஸ்மி, கப்பியரையை சேர்ந்த ஜெயசுதா, அழகிய பாண்டி புரத்தைச் சேர்ந்த ஜானுஜா ஆகிய நான்கு பேர் மீது போலீஸ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

### திருச்சி ஐஜி அலுவலகம் அருகே

## தம்பதியினர் சாலை மறியல்



திருச்சி, ஏப். 29

கணவரை தாக்கியவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய லஞ்சம் கேட்ட புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் காவல் ஆய்வாளர் கலா மீது நடவடிக்கை எடுக்கக் கோரி திருச்சி மண்டல காவல் துறை தலைவர் அலுவலகத்தில்

மனு கொடுக்க வந்த தம்பதியினர், ஐஜி அலுவலகம் அருகே குடும்பத்துடன் சாலை மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. போக்குவரத்து போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை அழைத்துச் சென்றனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

### கே .எட்டிப்பட்டி கிராமத்தில்

## குடிநீர் பைப் லைன் சேதப்படுத்திய நான்கு பேர் மீது வழக்கு



கிருஷ்ணகிரி, ஏப். 29

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஊராட்சி ஒன்றியம் கே . எட்டிப்பட்டி ஊராட்சி கரடி கவுண்டனூர் கிராமத்தில் இரு தரப்பினர் இடையே தகராறு ஏற்பட்டு ஊராட்சிக்கு சொந்தமான குடிநீர் பைப் லைன் சேதப்படுத்தியது தொடர்பாக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தலின் படி உதவி இயக்குனர் ஊராட்சிகள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் மேற்படி சம்பவ இடத்தினை பார்வையிட்டு சுமார் 200 குடும்பங்களுக்கு தண்ணீர் செல்லும் பைப் லைன் உடனடியாக சரி செய்து குடிநீர் வழங்க வழிவகை செய்துள்ளனர் மேலும் இளவரசன் என்பவர் தனது வீட்டிற்கு முறையற்ற குடிநீர் இணைப்பு எடுத்த காரணத்தினால் இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட பிரச்சனையின் அடிப்படையில் மேற்கண்ட குடிநீர் குழாய்கள் உடைக்கப்பட்டுள்ளதுஇது சம்பந்தமாக கே. எட்டிப்பட்டி ஊராட்சி செயலாளர் பி. சரவணன் ஊத்தங்கரை வட்டம் சாமல்பட்டி காவல் நிலையத்தில் .இளவரசன் ஜெயவேல் .அரசு .ஜெய்சங்கர் ஆகியோர் குடிநீர் பைப் லைன்களை சேதப்படுத்தியது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் அதன்படி சாமல்பட்டி காவல் நிலையதில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் உமா தெரிவித்துள்ளார்

### ஆரல்வாய்மொழி அருகே

## டாரஸ் லாரியில் பைக்மோதி விபத்து தனியார் நிறுவன ஊழியர் உயிரிழப்பு



நாகர்கோவில், ஏப். 29

ஆரல்வாய்மொழி, மிஷன் காம்பவுண்ட் பகுதியை சேர்ந்தவர் டேவிட் சுஜன் (30). தனியார்கம்பெனியில் பணியாற்றி வந்தார். இவரும், இவர்நண்பர் ஸ்டான்லி ஜோஸ் என்பவரும் கடந்த 25ஆம் தேதி இரவு 10:15 மணிக்கு பைக்கில் ஆரல்வாய்மொழி மூவேந்தர் நகர் பகுதியில் சென்று கொண்டிருந்தனர். அப்போது அந்த பகுதியில் சாலையோரம் நின்ற டாரஸ் லாரியின் பின்னால் பைக் மோதியதில் இதில் ஸ்டான்லி ஜோஸ், டேவிட் ஆகியோர் பலத்த காயம் அடைந்தனர். படுகாயம் அடைந்த இருவரையும் தனித்தனி தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இது குறித்து ஆரல்வாய்மொழி போலீசார் விசாரணை நடத்தி கேரளபதிவெண் கொண்ட டாரஸ் லாரி டிரைவர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்த நிலையில் இந்த விபத்தில் படுகாயம் அடைந்து சிகிச்சையில் இருந்து வந்த டேவிட் நேற்று உயிரிழந்தார். அவரது உடல் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஸ்டாலின் ஜோஸ் தொடர்ந்து சிகிச்சையில் உள்ளார்.

### கே .எட்டிப்பட்டி கிராமத்தில்

## குடிநீர் பைப் லைன் சேதப்படுத்திய நான்கு பேர் மீது வழக்கு

கிருஷ்ணகிரி, ஏப். 29

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஊராட்சி ஒன்றியம் கே . எட்டிப்பட்டி ஊராட்சி கரடி கவுண்டனூர் கிராமத்தில் இருதரப்பினர் இடையே 26.4.2026 அன்று தகராறு ஏற்பட்டு ஊராட்சிக்கு சொந்தமான குடிநீர் பைப் லைன் சேதப்படுத்தியது தொடர்பாக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி உதவி இயக்குனர் ஊராட்சிகள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் மேற்படி சம்பவ இடத்தினை பார்வையிட்டு சுமார் 200 குடும்பங்களுக்கு தண்ணீர் செல்லும் பைப் லைன் உடனடியாக சரி செய்து குடிநீர் வழங்க வழிவகை செய்துள்ளனர்

மேலும் இளவரசன் என்பவர் தனது வீட்டிற்கு முறையற்ற குடிநீர் இணைப்பு எடுத்த காரணத்தினால் இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட பிரச்சனையின் அடிப்படையில் மேற்கண்ட குடிநீர் குழாய்கள் உடைக்கப்பட்டுள்ளது

இது சம்பந்தமாக கே. எட்டிப்பட்டி ஊராட்சி செயலாளர் பி. சரவணன் ஊத்தங்கரை வட்டம் சாமல்பட்டி காவல் நிலையத்தில் .இளவரசன் ஜெயவேல் .அரசு .ஜெய்சங்கர் ஆகியோர் குடிநீர் பைப் லைன்களை சேதப்படுத்தியது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் அதன்படி சாமல்பட்டி காவல் நிலையதில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருகிறது எனமத்தூர்வட்டாரவளர்ச்சி அலுவலர் உமா தெரிவித்துள்ளார்

### தாழக்குடி அருகே

## விவசாயி கொலை; தேங்காய் வெட்டும் தொழிலாளி கைது

நாகர்கோவில், ஏப். 29

தாழக்குடி அருகே தோப்பூர் கனகமூலம் குடியிருப்பு பகுதி சேர்ந்தவர் பலவேசமுத்து (72). விவசாயி. இவர் அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வந்தார். இவருக்கு அதே போதையை சேர்ந்த தேங்காய் வெட்டும் தொழிலாளி செல்வகுமார் (57) என்பவருக்கும் நிலம் குத்தகை எடுப்பது தொடர்பாக முன்விரோதம் இருந்து வந்தது. அடிக்கடி இருவர்களிடையே தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

மேலும் செல்வகுமார் பலவேசமுத்துவை பார்க்கும் இடங்களில் எல்லாம் வெட்டி கொலை செய்து விடுவதாக தொடர்ந்து கொலை மிரட்டல் விடுத்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினை ம் மாலை கனகம் மூலம் குடியிருப்பு சந்திப்பில் செல்வகுமார் நின்று கொண்டு இருந்தார். அந்த வழியாக பலவேசமுத்து வந்தார். அப்போது அவர் பலவேசமுத்துவை பார்த்து தகாத வார்த்தைகள் பேசி தாக்கி உள்ளார். அக்கம் பக்கத்தினர் இருவரையும் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

இதை அறிந்த பலவேசமுத்துவின் மூத்த மகன் லிங்கம் தந்தைக்கு நடந்ததை கேள்விப்பட்டதும் செல்வகுமார் வீட்டிற்கு தந்தையை அழைத்து சென்றுள்ளார். இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது ஆத்திரமடைந்த செல்வகுமார் வீட்டிலிருந்த தேங்காய் வெட்டும் அரிவாளை எடுத்து பலவேசமுத்துவின் வயிற்றில் வெட்டினார். இதில் அவர் ரத்த வெள்ளத்தில் சரிந்து, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இது குறித்து ஆரல்வாய்மொழி போலிசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, போலீசார் உடலை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி, செல்வகுமாரை நேற்று கைது செய்தனர்.

## பேச்சிப்பாறையில்

# சுமை தூக்கும் கேரள தொழிலாளி தீக்குளித்து தற்கொலை

மார்த்தாண்டம், ஏப். 29

கடையாலுமூடு சீறோ பாயிண்ட் பகுதியில் உள்ள சோதனைசாவடிஅருகேநீர்வளத்துறைக்குசொந்தமான நிலம் உள்ளது. அங்கு நேற்று முன்தினம் இரவு திடீரென ஒரு பகுதியில் தீ பிடித்து எரிந்து கொண்டிருந்தது. இதை அந்த வழியாக பைக்கில் சென்று கொண்டிருந்தவர்கள் உடனே பார்த்தனர். அப்போது அங்கிருந்து காப்பாற்றுங்கள் என்று அலறும் சத்தம் கேட்டுள்ளது. புதர்களுக்கு இடையே இருளான பகுதியில் சத்தம் கேட்டதால் இது குறித்து அந்த பகுதியை சேர்ந்தவர்களிடம் தகவல் தெரிவித்த, தொடர்ந்து செ சென்று பார்த்தபோது அங்கு உடலில் ஒருவர் தீப்பற்றி எரிந்த நிலையில் கிடந்தார்.

பொதுமக்கள் அவரை மீட்டு குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் குறித்து அறிந்ததும் கடையாலுமூடு போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரித்தனர். விசாரணை அல்லது நபர் தீக்குளித்து தெரிய வந்தது.

மேலும் அவரது பெயர் சசிதரன் என்பதும், கேரளா மாநிலம் நெடுமங்காடு பகுதியை சேர்ந்தவர் என்பதும், மேலும் அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டு அரசு உதவி தொகை பெற்று வாழ்கை நடத்தி வந்ததும் தெரிய வந்துள்ளது. இதற்கிடையே குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சிகிச்சை பெற்று வந்த சசிதரன் நேற்று காலை சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்தார். இது குறித்து கடையாலுமூடு போலீசார் வழக்கு பதிவு செய்து தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரித்து வருகின்றனர்.

## திருச்சி வாட்ஸ் அப்பில்

# ஆபாச வீடியோ எஸ் எஸ் ஐ சஸ்பெண்ட்



திருச்சி, ஏப். 29

திருச்சி காந்தி மார்க்கெட் காவல் நிலையத்தில் எஸ் எஸ்ஐயாக பணிபுரியும் செந்தாமரை கண்ணன் (56) என்பவர், சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு உருவாக்கப்பட்ட வாட்ஸ்அப் குழுவில் பெண்கள் குறித்த அவதூறான ஆபாச வீடியோவை பதிவிட்டதாக கூறப்படு கிறது. இதன் தொட ர்ச்சியாக, மாநகர கமிஷனர் காமினி அவரை பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார்.

## திருச்சி வாட்ஸ் அப்பில்

# போதைக்கு அடிமையான கல்லூரி மாணவர் தூக்கிட்டு தற்கொலை

மார்த்தாண்டம், ஏப். 29

மார்த்தாண்டம் அருகே சாங்கை என்ற பகுதியை சேர்ந்தவர் ரவி மகன் அனீஸ் (22). பிரபல கல்லூரியில் பி காம் 3 ம் ஆண்டு படித்து வந்தார். இவர் போதை பழக்கத்திற்கு அடிமையானதாக கூறப்படுகிறது. இதனால் வாழ்க்கையில் விரக்தி அடைந்து இருந்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவ தினம் திடீரென வீட்டில் தூக்கு போட்டு உயிருக்காக போராடிய நிலையில் காணப்பட்டார். உறவினர்கள் அவரை மீட்டு சாமியார் மடத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக நாகர்கோவிலில் உள்ளதனியார் மருத்துவர் இருந்தவர், தொடர்ந்து குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மாற்றப்பட்டார். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து மார்த்தாண்டம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மார்த்தாண்டம் அருகே

# இளம் பெண்ணிடம் வரதட்சணை கேட்டு தாக்குதல்; 5 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம், ஏப். 29

மார்த்தாண்ட பகுதியை சேர்ந்தவர் ஜெயகணேஷ் (35). கொத்தனாராக வெளிநாட்டில் வேலை பார்க்கிறார். இவருக்கும் அதே பகுதி சேர்ந்த அபிதா என்பவருக்கும் கடந்த 2019 ஆம் ஆண்டு திருமணம் நடந்துள்ளது. அபிதாவின் பெற்றோர் 25 பவுன் நகை, ஜெயகணேஷ் உறவினர்களுக்கு 9 பவுன் நகை, 2 லட்சம் பணம், வீட்டு உபயோக பொருட்களை வரதட்சணையாக கொடுத்துள்ளனர்.

பின்னர் மீண்டும் ஜெயகணேஷ் மனைவி அபிதாவிடம் ரூ. 10 லட்சம் வேண்டுமென கேட்டு தொல்லை கொடுத்துள்ளார். இதை அடுத்து அபிதாவின் வீட்டில் கேட்டு ரூ.8.50 லட்சம் பணத்தை வாங்கிக் கொடுத்துள்ளார். இதில் ஜெய்கணேஷ் கார் மற்றும் பைக்குகள் வாங்கியுள்ளார். ஜெய்கணேஷ் வெளிநாட்டில் வேலை செய்து வருவதால் அபிதாவிடமிருந்து 18 பவுன் நகைகளை ஜெய்கணேஷின் சித்தி கிருஷ்ணம்மாள் கேட்டு வாங்கியுள்ளார். மேலும் இருப்பில் உள்ள நகைகளை ஜெய் கணேஷிடம் சொல்லி அபிதாவிடம் கேட்டு தொந்தரவு செய்துள்ளார். ஆனால் அபிதா கொடுக்காததால் ஆத்திரம் அடைந்த கிருஷ்ணம்மாள், ஜெய்கணேசின் தந்தை ஜெபமணி (68), ஜெனிஷ் ( 27), ஜெனிபா ( 38) ஆகிய 4 பேரும் சேர்ந்து அபிதாவை சரமாரியாக தாக்கி உள்ளனர். இதில் படுகாயம் அடைந்த அபிதா குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இது குறித்து மார்த்தாண்ட மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. புகாரின் பேரில் ஜெயகணேஷ் , கிருஷ்ணம்மாள், ஜெபமணி, ஜெனிஸ், ஜெனிபா ஆகிய 5 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடைபெற்று வருகிறது.



## தஞ்சாவூரில்

# மாணவர்களை தன்னார்வலராக மாற்றும் கோடைக்கால பயிற்சி முகாம்

### கலெக்டர் பிரியங்கா பங்கஜம் பங்கேற்பு

தஞ்சாவூர் ஏப்ரல் 29

அருங்கானுயிர் காப்பு மற்றும் சுற்றுச்சூழல் அறக்கட்டளை சார்பில் இளம் மாணவ மாணவிகளை தன்னார்வலராக மாற்றும் முயற்சியாக கோடைகால ஒரு நாள் இயற்கை பயிற்சி முகாம் தஞ்சாவூர் மாவட்ட வன அலுவல க வளாகத்தில் அமைந்துள்ள அமைப்பின் அலுவலகத்தில் ந டை பெ ற் ற து . நிகழ்ச்சியில் மாண வ மாணவிகள் மற்றும் பெற்றோர் கள் கலந்து கொண்டனர்.

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர்பிரியங்காபங்கஜம் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார்..

மு க ா ை ம கும்பகோணம் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ப்ரீத்தி சந்திரமோகன் ஒருங்கிணைத்தா ழ்ர் நிகழ்வில் அமைப்பைச் சேர்ந்த சரவணன், குலோத்துங்கன்,, பாரத பிரசாத், சக்திதரன் ஆகியோர் இணைந்து ஒருங்கிணைத்து நடத்தினர்

நிகழ்வில் அமைப்பின் நிறுவனரும், இயக்குனருமான முனைவர் சதீஷ்குமார் ராஜேந்தி ரன் வன உயிர்கள் பற்றி அடிப்படை அறிமுகம், மீட்பு பணிகள், ஆராய்ச் சி செயல்பாடுகள் மற்றும் சமூக விலங்குகள் குறித்து விழிப்புணர்வு குறித்து பேசினார். நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக கலந்து கொண்ட மாணவர்களுக்கு இயற்கை பயிற்சி முகாமில் பங்கேற்றதற்கான சான்றிதழ் வழங்கப் பட்டன.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் அகில இந்திய மக்கள் நலக் கழகம் கிளை அலுவலகம் புதியதாக நமது அகில இந்திய மக்கள் நல கழகம் மாநில தலைவர் டாக்டர் சிவகுமார்ஆலோசனைப்படிமாநிலதுணைத்தலைவர்வழக்கறிஞர்பிசதீஸ் கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் திரு கோபாலரெட்டி தலைமையில் மற்றும் ஊத்தங்கரை கிளை நிர்வாகிகள்சந்துரு,வித்யா,தவமணி,சதீஸ்மற்றும்உறுப்பினர்கள்துப்புரவுபணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு விழா சிறப்பாக நடைபெற்றது

## முகிலன்குடியிருப்பு பொன் சிவசுடலைமாட சுவாமி திருக்கோவில்

# சித்திரை கொடை விழா இன்று தொடங்குகிறது

தென்தாமரைகுளம்., ஏப். 29.

மு கி லன் கு டி யி ரு ப் பு பொன் சிவசுடலைமாட சுவாமிமற்றும் பொன் நாகலிங்கேஸ்வரர் திருக் கோ யில் சித்திரைக் கொடைவிழா இன்று 29 ம்தேதி தொடங்கி அடுத்த மாதம் 2ம் தேதி வரை நான்கு நாட்கள் நடைபெ று கி ற து . முதல் நாளானஇன்று அதிகாலை காலை 5 மணிக்கு : திருநடை திறப்பு, 5.30 மணிக்கு மங்கள இசை,மாலை 6. மணிக்கு திருவிளக்கு பூஜை,இரவு 8 மணிக்கு தீபாராதனை 9 மணிக்கு சமபந்தி விருந்தும்நடக்கிறது.

இரண்டாம் நாளான நாளை 30ம்தேதி அதிகாலல 5 மணிக்கு திருநடை திறப்பு, 5.30 மணி : மங்கள இசை,மாலை 5.30 மணிக்கு நாதஸ்வரம்,இரவு 8 மணிக்கு சமபந்தி விருந்து,இரவு 8. 30 மணிக்கு நாதஸ்வரம் , 9 மணிக்கு வில்லிசை இரவு 10 மணிக்கு பொன் நாகலிங்கேஸ்வரர் சுவாமிக்கு பூஜை, 11 மணிக்கு பெருமாள் சுவாமிக்கு அலங்கார பூஜை, நள்ளிரவு 12 மணிக்கு பொன்சிவசுடலை மாடசுவாமிக்கு அலங்கார பூஜையும் நடக்கிறது.

மூன்றாம் நாளான 1ம் தேதி காலை 6 மணிக்கு ந ா த ஸ் வ ர ம் , 8 மணிக்கு சிற்றுண்டி வ ழ ங் கு த ல் , 9.30 மணிக்கு நாதஸ்வரம், 10 மணி மகுடகச்சேரி 11மணிக்கு



பெரிய நாயகி, நாகலிங்கேஸ்வரர் சுவாமிக்கு சிறப்பு பூஜை,நண்பகல் 12.30 மணிக்கு சமபந்தி வி ருந் து , ,பிற்பகல் 1 மணிக்கு பொன்சிவசுடலை மாடசுவாமிக்கும், பொன் கழுக்காரமுண்டன்சுவாமிக்கும் அலங்கார பூஜை,மாலை 3.30 மணிக்கு நாதஸ்வரம், 4 மணிக்கு வில்லிசை, 5.30 மணிக்கு பொன் செங்கிடாக்காரசுவாமிக்கு அலங்கார பூஜை,இரவு 7 மணிக்கு மகுடகச்சேரி,8 மணிக்கு பொன்கட்டையேறும் பெருமாள் சுவாமிக்கு அலங்கார பூஜை,8.30 மணிக்கு சமபந்தி விருந்து,10 மணிக்கு நாதஸ்வரம், 10.30 மணிக்கு வில்லிசை, நள்ளிரவு 12 மணிக்கு பொன் சிவசுடலை மாடசுவாமிக்கு அர்த்தசாம பூஜையும் நடக்கிறது. நான்காம் நாளான 2ம் தேதி காலை 8 மணிக்கு அமுது படைத்தலுடன் பூஜையும் ,9மணிக்கு சமபந்தி விருந்துடன் விழா நிறைவடைகிறது. விழா ஏற்பாடுகளை விழாக்குழுவினர்கள் செய்துள்ளனர்



திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.தர்ப்பகராஜ்,இ.ஆ.ப அவர்கள் திருவண்ணாமலை மாநகராட்சி ஒழுங்குமுறை விற்பணை கூட்டத்தில் உள்ள வாக்கு எண்ணுகை மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

# புதுச்சேரியில் வாங்கிய மதுவை தமிழகத்துக்குள் அனுமதிப்பதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அரசு முறையீடு

சென்னை, ஏப். 29

தனிநபர் 4.5 லிட்டர் அளவுக்கு மதுபானம் வைத்துக் கொள்ளலாம் என்ற அரசாணையைச் சு ட் டி க் க ா ட் டி , புதுச்சேரியில் இருந்து மதுபானம் கொண்டு வந்தவருக்கு எதிரான வழக்கை ரத்து செய்த உத்தரவில் விளக்கம் கோரி தமிழக அரசு தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் இருந்து மதுபானம் கொண்டு வந்ததாக தொடரப்பட்ட வழக்கை ரத்து செய்யக் கோரி கடலூரரைச் சேர்ந்த வல்லரசு என்பவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், தனிநபர் ஒருவர் 4.5 லிட்டர் மதுபானம் வைத்திருக்கலாம் என்ற அரசாணையைச் சுட்டிக்காட்டி, வழக்கை ரத்து செய்தது.

இ ை த ய டு த் து , புதுச்சேரியில் இருந்து 4.5 லிட்டர் அளவுக்கு மதுபானம் கொண்டு வர உயர் நீதிமன்றம் அனுமதித்துள்ளதாக, சமூக வலைதளங்களில் செய்தி பரவியது.

இந்த நிலையில், இந்த உத்தரவு குறித்து விளக்கம் அளிக்க கோரிய மனுவை நாளை விசாரணைக்கு எடுக்கக் கோரி, தமிழக அரசின் தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா, நீதிபதி எம்.நிர்மல்குமார் முன் முறையீடு செய்தார்.

அப்போது அவர், நீதிமன்ற உத்தரவு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாகவும், தனிநபர் 4.5 லிட்டர் மதுபானம் வைத்துக்கொள்ள அனுமதியளிக்கும் அரசாணை புதுச்சேரி மாநில மதுபானத்துக்கு பொருந்தாது எனவும், பிற மாநில மதுபானங்கள், மிகக் குறைந்த அளவில் இருந்தாலும் அதனை வைத்திருப்பது அல்லது விற்பனை செய்வது சட்டப்படி குற்றம் என அரசு தரப்பில் ஏற்கெனவே விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

தலைமை குற்றவியல் வழக்கறிஞரின் முறையீட்டை ஏற்ற நீதிபதி, விளக்கம் கோரிய மனுவை நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக அனுமதியளித்துள்ளார்.

# அமைச்சர் நேருவுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்ய உத்தரவிடவில்லை: உயர் நீதிமன்றம்



சென்னை, ஏப். 29

“நகராட்சி நிர்வாக துறையில் அதிகாரிகள் நியமனத்தில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக, அமைச்சர் நேருவுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என குறிப்பிட்டு உத்தரவில் கூறவில்லை. முறைகேடு தொடர்பாக வழக்குப் பதிவு செய்யவே உத்தரவிடப்பட்டது” என சென்னைஉயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நகராட்சி நிர்வாக துறையில், 2538 உதவி மற்றும் இளநிலை பொறியாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் நியமனத்துக்கு 634 கோடி ரூபாய் லஞ்சம் பெறப்பட்டுள்ளதாக கூறி, இதுசம்பந்தமாக வழக்குப்பதிவு செய்யும்படி, தமிழக டி.ஜி.பி.க்கு, அமலாக்கத் துறை கடிதம் அனுப்பியிருந்தது.

இந்த கடிதத்தின் அடிப்படையில், வழக்குப்பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிடக் கோரி அதிமுக எம்.பி. இன்பதுரை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அமலாக்கத் துறை கடிதத்தின் அடிப்படையில் உடனடியாக வழக்குப் பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யாத லஞ்ச ஒழிப்புத் துறைக்கு எதிராக, இன்பதுரை தரப்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதேபோல, அதிகாரிகள் நியமன முறைகேடு தொடர்பாக வழக்குப்பதிவு செய்ய பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என தமிழக அரசும், அமைச்சர் நேரு தரப்பிலும் மறு ஆய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த அனைத்து வழக்குகளும், தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த போது, நேரு தரப்பில், வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கும் முன் தனது தரப்பில் வாதங்களை முன் வைக்க வ ா ய் ப் ப ளி க் க ப் ப ட வில்லை என தெரிவிக்கப் பட்டது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், அமைச்சர் நேருவுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என குறிப்பிட்டு உத்தரவில் கூறவில்லை. முறைகேடு தொடர்பாக வழக்குப் பதிவு செய்யவே உத்தரவிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர். மேலும், இந்த வழக்கில் விரிவான வாதங்கள் வைக்க வேண்டும் என்பதால், விசாரணையை கோடை விடுமுறைக்கு பின் தள்ளிவைக்கலாம் என நீதிபதிகள் தெரிவித்தனர்.

அதுவரை வழக்குப்பதிவு செய்ய பிறப்பித்த உத்தரவை நிறுத்தி வைக்க வேண்டும் என நேரு தரப்பில் கோரப்பட்டது. இதையடுத்து, எந்த உத்தரவும் பிறப்பிக்காமல் தமிழக அரசு மற்றும் நேருவின் மறு ஆய்வு மனுக்களையும், இன்பதுரையின் நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் ஜூன் 4 வது வாரத்துக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

# இரு தொகுதிகளில் போட்டி: தேர்தல் செலவை வேட்பாளர் ஏற்க உத்தரவிடக் கோரிய வழக்கு தள்ளுபடி

சென்னை, ஏப். 29

தேர்தல்களில் இரு தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களிடம், ஒரு தொகுதி பதவியை ராஜினாமா செய்யும் போது, தேர்தல் செலவை திருப்பி செலுத்துவதாக உத்தரவாத பத்திரம் பெற வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரிய வழக்கை சென்னைஉயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

மதுரை மேலூரை சேர்ந்த மணி என்பவர் தாக்கல் செய்த மனுவில், சட்டமன்றம், மக்களவை தேர்தல்களில் சில வேட்பாளர்கள் இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகின்றனர். இரு தொகுதிகளிலும் வெற்றி பெறும் பட்சத்தில், ஒரு தொகுதி பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். அந்த தொகுதிக்கு இடைத் தேர்தல் நடத்த வேண்டியுள்ளது. அதனால் அரசுக்கு செலவு ஏற்படுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதனால், இரு தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களிடம், ராஜினாமா செய்யும் தொகுதியின் தேர்தல் செலவுகளை ஏற்க வேண்டும் என உத்தரவாத பத்திரம் பெற வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

இந்த மனு, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த போது, வேட்பாளர்கள் இரு தொகுதிகளில் போட்டியிட சட்டம் அனுமதியளிக்கிறது. இந்த சட்டப்பிரிவை எதிர்த்த வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளதைச் சுட்டிக்காட்டி, வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.



சேலம் மாவட்டம், சங்ககிரி மற்றும் எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், விவேகானந்தா கல்வி நிறுவன வளாகத்தில் அமைந்துள்ள வாக்கு எண்ணும் மையத்தின் இருப்பறையில் காவல்துறை பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளதை,கண்காணிப்புகேமராக்கள்மூலம்கண்காணிக்கப்பட்டுவருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.